# டிரினிடி மகளிர் கல்லூரி
# நாமக்கல் - 637 002

## தாள் : பொதுதமிழ் (TMLP17)
## பாடம் : அலகு 5 சங்கஇலக்கியம்
## தலைப்பு : நெடுநல்வாடை


வழங்குபவர்:

முனைவர் ப.விஷ்ணுபிரியா

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறை

http://www.trinitycollegenkl.edu.in/

# நெடுநல்வாடை

நெடுநல் வாடை என்பதற்கு நீண்ட நல்லவாடைக் காற்று என்பது பொருள் தலைவியைப் பிரிந்து தலைவன் போருக்குச் செல்கிறான். ஆவள் அவனைப் பற்றிய நினைவால் துயரத்தில் ஆழ்ந்திருக்கிறாள் இன்ப வாழ்வைத் தரும் அரண்மனையில் இருந்த போதிலும் அவளுக்கு வாடைக்காற்று கொடியதாகவும் அது வீசுகிற காலம் மிக நீண்டதாகவும் ஆகிறது.

ஆனால் பாசறையில் படைவீரர்களுக்கு நடுவில் இருந்து, அவர்களுக்கு இனிய ஆறுதல் மொழிகளைக் கூறி, நாட்டைக் காக்கிற கடமையில் முழுமையாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றமையால் தலைவனுக்கு வாடைக்காற்று இனியதாக நல்லதாக அமைகிறது இதனால் ‘நெடுநல்வாடை” என்னும் பெயர் இவ்விலக்கிறத்திற்குத தரப்பபட்டுள்ளது

நெடுநல்வாடையில் அகவொழுக்கச் செய்திகளே பெரிதும் இடம்பெற்றுள்ளன. எனினும் வேம்புதலையாத்த நோன்காழ் எஃகம் என்று பாண்டியனது குடிக்கு உரிய அடையாள மாலையான வேம்பு தலைவனுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளமையால், இதனைப் புறத்திணைப் பாட்டு என்றும் உரையாசிரியர்கள் கருதுகின்றனர். துலைவியின் நிகழ்வுகள் அகம் சார்ந்தனவாகவும் தலைவனின் நிகழ்வுகள் புறம் சார்ந்தனவாகவும் உள்ளன. எனவே இதனை அகப்புறப்பாட்டு என்றும் கூறலாம்.

# நெடுநல்வாடையில் அமைந்துள்ள திணைகள்

திணை : வாகை

துறை : கூதிர்ப்பாசறை

நெடுநல்வாடையில் கூதிர்பருவத்தினைக் குறிப்பிடுவதால் அப்பாடல் புறப்பொருளில் கூதிர்ப்பாசறை துறை அமைந்த வாகைத்திணை என்கிறார் நச்சினார்க்கினியர்.

## நூல் அறிமுகம்

சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்றாக இடம்பெற்றுள்ள நூல் நெடுநல்வாடையாகும் 188 அடிகளைக் கொண்ட ஆசிரியப் பாவாலானது. நக்கீரர் இயற்றியது வேம்பு தலையாத்த நோன்காழ் எ.்.கம் என பாண்டியனின் அடையாள மாலையான வேம்பு வருவதால் இது பாண்டியன் நெடுஞ்செழியன் குறித்த நூல் எனக் கொண்டு நச்சினார்க்கினியர் இதனை புறப்பாடல் என்பர் பட்டிதமணி கதிரேசன் செட்டியார் இதனை அகப்பாட்டு என நிறுவியுள்ளார்.

## பாடல் வரிகள்

“மாமேயல் மறப்ப மந்தி கூரப்
பறவை படிவன வீடிக் கறவை
கன்று கோள் ஒழியக் கூடிய வீசிக்
குன்றுகுளிர்ப் பன்ன கூதிர்ப் பானாள்”

அன்னத்தூவி பரப்பித் துகில் போர்த்த தந்தக் கட்டிலிலே, அரசி கூந்தல் புனையாமல் மார்பில் மங்கல நான் மட்டும் இலங்க, காதிலே தாளருவியும் கையிற் சங்கு வளையும் அணிந்து கட்டில் விதானத்தில் வரையப்பட்டுள்ளன. திங்கள் உரோகிணிச் சித்திரம் கண்டு பெருவுயிர்ப்பெய்திக் கண்ணீர் வடிக்கின்றாள் துயர் பெருகுகிறது. தோழியர் அவளது அடிவருடி ஆறுதல் உரைக்கின்றனர் அரசியின் நிலையை

- “புனையா ஓவியம் கடுப்ப”

ஏன்று தீட்டியிருப்பது நெடுநல்வாடை இலக்கியத்தின் உயிர்மையாகத் திகழ்கிறது. அரசியின் நிலை இவ்வாறாக அங்கே போர்க்களத்தில், பாசறையில் அரசன் இல்வாழ்வின்பத்தை முற்றிலுமாய் மறந்து கடமை வீரனாய்க் காட்சியளிக்கின்றான் நள்ளென்ற இரவில் காரிருளில் தவ்வென்று மழைத்துளி தெளிப்பத் தோளில் நடுவும் துகிலை அனைத்துப் பிடித்தபடி வீரனொருவன் தோளில் கைபொட்டு நடந்தே சென்று விழுப்புண்பட்ட வீரர்களை முறையே காட்ட அவர்களை நேரில் கண்டு உசாளி ஆறுதல் அலிக்கிறான் அவன் நினைவெல்லாம் போரிலும் அதில் புனையும் வெற்றியிலும் ஆழ்ந்துள்ளது.

“நள்ளென் யாமந்தும் பள்ளி கொள்ளான்

சிலரொடு திரிதரும் வேந்தன்

பலரொடு முரணிய பாசறைத்தொழிலே”

என்கிறார் ஆசிரியர். நச்சினார்க்கினியர் இப்பாடலை வாகைத் திணையின் கூறுபாடரிகய வாடைப்பாசறை என்னும் துறையுள் அடக்குவர் பாலையின் புறமாகக் கூறப்படும் வாகைத்திணை வெற்றியைக் குறிப்பதாகும்.

இன்பத்தை நுகர விரும்புவோருக்குச் சிறந்த காலமாகிய கூதிர்க்காலத்தில் கூட, இன்பத்தில் ஆர்வமின்றி, பகைவர் நாட்டிற்குச் சென்று, பாசறையில் தங்கி, கடமையுணர்வில் சிறந்து விளங்கிய பாண்டியனின் வெற்றியைக் கூறுவதால், இப்பாடல் புறத்திணையைச் சார்ந்த வாகைத்திணை எனப்படும்.

நன்றி